

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணியில் நேற்று முன்தினம் (4.12.2024) நடைபெற்ற திருவல்லிக்கேணி பகுதி, 120ஆவது வட்டக்கழகச் செயலாளர் ஐ.சி.எஃப். எம்.சங்கர் மகள் ஷாலினி – ராகவன் இணையரின் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.கழக சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 3 புதிய வழித்தட பேருந்து சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 04.12.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, பொது மேலாளர் (கு.அ.போ.க.) கே.முகமது நாசர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்

# ரூ.1383 கோடியில் 79 புதிய திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, டிச.6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மருத்துவ உபகரணங்கள் வழங்கி, 29 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.**

2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தை 1,000 கோடி ரூபாய் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசு செயல்படுத்தும் என்றும், இத்திட்டத்தில், கட்டமைப்பு பற்றாக்குறைகளையும், வளர்ச்சிக் குறியீடுகளின் குறைபாடுகளையும் கண்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, "வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்" கீழ், மாதிரி பள்ளிகளை மேம்படுத்துதல், ஏற்கத்தக்க விலையில் வீடுகள் கட்டுதல், புதிய பேருந்து முனையங்கள் மற்றும் பணிமனைகளை தரம் உயர்த்துதல் மற்றும் கட்டுமானம், முக்கிய பகுதிகளில் துணை மின் நிலையங்களை நிறுவுதல், போதைப்பொருள் மீட்பு மறுவாழ்வு மையம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்தல், சிசிடிவி கேமராக்களை பொருத்துவதன் வாயிலாக பாதுகாப்பினை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக உயர்தர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணி, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் மற்றும் திடக் கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், வணிக சந்தைகள், சலவையகம், குருதி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு கட்டுமானங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.03.2024 அன்று சென்னை, தங்கச்சாலையில் 2,097 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 87 திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற் கான இலட்சினையை வெளியிட்டார்கள். இத்திட்டமானது பல்வேறு துறைகளின் சார்பில் விரிவடைந்து தற்போது 6,309 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 252 திட்டங்களாக அதிகரித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக, வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் இரண்டாவது கட்டமாக, முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மருத்துவ உபகரணங்கள் வழங்கி, 29 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். அதன் விவரங்கள்:

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வால்டாக்ஸ் சாலையில் 129.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 700 புதிய குடியிருப்புகள் கட்டுதல், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் 143.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 776 புதிய குடியிருப்புகள் கட்டுதல், கொன்னூர், திருவொற்றியூர், பெரம்பூர் சென்ட்ரல் நிழற்சாலை, கொண்டித்தோப்பு, திரு.வி.க. நகர் சந்திரயோகி சமாதி சாலை, புழல் விளாங்காடுபாக்கம் ஆகிய இடங்களில் 57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடங்கள் கட்டுதல், 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்டையார்பேட்டையில் விளையாட்டு அரங்கம், வில்லிவாக்கம் அகத்தியர் நகர் மற்றும் இராயபுரம் மூலகொத்தளத்தில் விளையாட்டு திடல்கள் அமைத்தல், கொளத்தூர் ஜவஹர் நகர் மற்றும் பெரியார் நகர் நூலகங்களை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துதல், கொளத்தூரில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் சேவை மையம் கட்டுதல், கொளத்தூர் நேர்மை நகரில் 36.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய காவல் நிலையம் கட்டுதல், என 421 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 15 புதிய திட்டப்பணிகள்;

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மாதவரம் பேருந்து முனையம் மற்றும் விநாயகபுரம் பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல், எண்ணூர், கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, பேசின் பாலம், பெரம்பூர், புரசைவாக்கம், அயனாவரம் ஆகிய இடங்களிலுள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், மாத்தூர், கொடுங்கையூர், இராயபுரம், பெரம்பூர், வண்ணாரப்பேட்டை – சோலையப்பன் தெரு, பெரியதம்பி தெரு மற்றும் வால்டாக்ஸ் சாலை, பேசின் பாலம் – கத்படா பிரதான சாலை மற்றும் சண்முகம் தெரு, செனாய் நகர் ஆகிய இடங்களில் உடற்பயிற்சி கூடங்கள், வியாசர்பாடி மற்றும் பெரம்பூர் ஆகிய இடங்களில் விளையாட்டு மைதானங்கள், வில்லிவாக்கத்தில் மறுவாழ்வு மையம் அமைத்தல், கொடுங்கையூரில் சமுதாயக்கூடம், சேத்பட்டு சுற்றுச்சூழல் பூங்காவை மேம்படுத்துதல், கத்திவாக்கம் மேம்படுத்தப்பட்ட நகர்ப்புற சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம், இராயபுரம் மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் பணிகள், காசிமேடு, கொளத்தூர், பல்லவன் சாலை ஆகிய இடங்களில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிகள், குளங்களை சீரமைக்கும் பணிகள், மண்டலம் 1 முதல் 8 வரையில் உள்ள மின்மாற்றிகளை சுற்றி அழகுபடுத்தும் வகையிலும், பாதுகாப்பு நோக்கிலும் அமைக்கப்பட்டுள்ள பார்வை மறைப்பான்கள், பெரம்பூரில் இறைச்சிக்கூடம் அமைக்கும் பணி, கோடம்பாக்கம் மகப்பேறு மருத்துவமனையை மேம்படுத்துதல், என 204 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 45 புதிய திட்டப்பணிகள்;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் குடிநீர் குழாய்களை சீரமைத்தல் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்களின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், என 440 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 திட்டப் பணிகள்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் தடையில்லா மின்சாரம் வழங்கிட டேவிட்சன் தெருவில் 33/11 கிலோ வாட் துணை மின்நிலையம் அமைத்தல் மற்றும் 310 ஆர்.எம்.யு மின் உபகரணங்கள் நிறுவுதல், என 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 திட்டப்பணிகள்;

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் துறைமுகத்தில் 269 புதிய குடியிருப்புகள் கட்டுதல், புளியந்தோப்பில் 612 புதிய குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் எல்லீஸ்புரத்தில் 65 புதிய குடியிருப்புகள் கட்டுதல், என 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப்பணிகள்;

என மொத்தம் 1,268 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

**கொளத்தூர், பெரியார் நகர் மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல்;**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் பெரியார் நகர் அரசு மருத்துவமனை மேம்படுத்தப்பட்டு, இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, நரம்பியல் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, வயிறு மற்றும் குடல் சிகிச்சைப் பிரிவு, பிளாஸ்டிக் சர்ஜரி போன்ற சிறப்பு பிரிவுகள் துவங்கப்பட்டு உயர் சிறப்பு மருத்துவமனையாக அமைக்கப்பட்டுள்ள அம்மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக 77 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய மருத்துவ உபகரணங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 29 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களில் கட்டப்பட்டுள்ள 8 அங்கன்வாடி மையங்கள், மணலி மண்டலத்தில் பல்நோக்கு மையம், மணலி மண்டலம் – சின்னமாத்தூர் சாலை, தேவராஜன் சாலை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடங்கள், மணலி, தண்டையார்பேட்டை, மாதவரம், இராயபுரம் ஆகிய மண்டலங்களில் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறைக் கூடுதல் கட்டடங்கள், மணலி, மாதவரம் மற்றும் இராயபுரம் ஆகிய மண்டலங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு திடல்கள், மாதவரம் மண்டலம் – அம்பத்தூர் ரெட் ஹில்ஸ் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மியாவாக்கி பூங்கா; என மொத்தம் 38 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 29 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்,

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, அ.வெற்றியழகன், இரா.மூர்த்தி, ஜோசப் சாமுவேல், ஆர்.டி.சேகர், ஜே.ஜே. எபினேசர், இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, எரிசக்தி துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க. ஆட்சியில் 7 பாலங்கள் கட்டிய உடனே இடிந்து விழுந்தன!

# கழக ஆட்சியைக் குறை கூற - எடப்பாடிக்கு உரிமை கிடையாது!

## பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலடி!

சென்னை, டிச. 6 -

எடப்பாடி ஆட்சியில் மட்டும் 7 பாலங்கள் கட்டிய உடனே இடிந்து விழுந்த வரலாறும் உண்டு. கனமழை வெள்ளம் மற்றும் பிற உபரி நீரும் சேர்ந்து அகரம்பள்ளிபட்டு பாலத்தின் மேற்பரப்புக்கு மேல் 4 மீட்டர் உயரத்திற்கு தண்ணீர் ஓடியது. இந்த பாலத்தின் நீர் வெளியேற்றும் திறன் விநாடிக்கு 54,000 கன அடி. ஆனால், 2 லட்சம் கன அடிக்கு மேல் தண்ணீர் சென்றதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராத பேரிடர் காரணமாக பாலம் உடைபட்டுள்ளது என எடப்பாடி பழனிசாமியின் விமர்சனத்திற்கு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் எ.வவேலு தனது சமூக வலை தளப்பதிவில் கூறியதாவது :-

மக்களுக்கு விடியும் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 1505 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், 328 பாலப்பணிகள் நடைபெற்று வருகிறது. எடப்பாடி ஆட்சியில் முடிக்காமல் விட்டு சென்ற, நீண்ட நாட்கள் நிலுவையில் இருந்த 38 ரயில்வே மேம்பாலங்கள் திராவிட மாடல் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டன.



எடப்பாடி ஆட்சியில் மட்டும் 7 பாலங்கள் கட்டி உடனே இடிந்து விழுந்த வரலாறும் உண்டு, கட்டும் போதே இடிந்த கடலூர் சிங்காரதோப்பு பாலமும் உண்டு, விழுப்புரம் தளவானூர் தடுப்பணையும் இடிந்து விழுந்தது உண்டு, உதாரணத்திற்கு, என்னுடைய மாவட்டத்திலேயே அம்மாபாளையத்தில் நாகநதியின் குறுக்கே கட்டப்பட்ட பாலமும், படவேடு இராமர் கோயில் சாலையில் கமண்டலநதி மேல் கட்டப்பட்ட பாலமும் ஆற்றில் அடித்து செல்லப்பட்டதை எங்கள் மாவட்ட மக்கள் மறவமாட்டார்கள். ஆனால் இதையெல்லாம் மறந்து எதிர்கட்சி தலைவர் தன் இருப்பிடத்தை காட்டிக்கொள்ள ஈரை பேன் ஆக்க முயற்சிக்கிறார்.

**உண்மை நிலை என்ன?**

ஃபெஞ்சல் புயல் காரணமாக வரலாறு காணாத வகையில் பெய்த அதீத கன மழையினால், சாத்தனூர் அணை யிலிருந்து வழக்கமாக வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவை விட நான்கு மடங்கு அதிகமாக அதாவது 1,75,000 கனஅடிக்கு மேல் அணையின் பாதுகாப்பு கருதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தொடர் மழையினால் கீழ்பகுதியில் பாம்பாறு, வரட்டாறு, நீர்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளநீரும், மற்றும் குளங்களின் நிரம்பி வெளியேறிய உபரி நீரும் மொத்தம் சேர்ந்து இப்பாலத்தில் அதிகப்படியான வெள்ள பெருக்கு ஏற்பட்டது. பாலத்தின் மேற்பரப்பிற்கு மேல் சுமார் 4 மீட்டர் உயரத்திற்கு நீரின் வேகம் அதிகரித்து ஓடியதால் இப்பாலம் பெரும் சேதமடைந்தது. இந்த பாலத்தின் நீர் வெளியேற்றும் திறன் வினாடிக்கு 54,000 கன அடி தான், "எதிர்பாராத பேரிடர்" காரணமாக அதிக வெள்ள பெருக்கு ஏற்பட்டதால் பாலம் உடைப்பட்டது.

திராவிட மாடல் ஆட்சியில் சாலைகள், பாலங்கள் தரம் வாய்ந்ததாக கட்டப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிலையிலும் தரக்கட்டுபாடு பொறியாளர்கள் தரத்தினை சோதிக்கின்றனர்.

முதலமைச்சராக, நெடுஞ்சாலைத் துறையையும் பொறுப்பில் வைத்திருந்த எடப்பாடியாருக்கு இந்த ஆட்சியினை குறை கூற எவ்வித தார்மீக உரிமையும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறியுள்ளார்.

## மழை பாதிப்பு:

# அரையாண்டுத் தேர்வு எழுத முடியாத மாணவர்களுக்கு ஜனவரி முதல் வாரம் தேர்வு!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!

சென்னை, டிச. 6 -

தமிழக அரசு - 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு கால முறை ஊதிய பதவி உயர்வு வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம் சார்பில் நன்றி மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் தங்கம் தென்னரசு, சென்னை மாவட்ட நூலக ஆணை குழு தலைவர் மனுஷ்ய புத்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

பின்னர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது :

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு பள்ளி களிலும் அரையாண்டு தேர்வுக்கான பாடத் திட்டங்கள் நடத்தி முடிக்கப் பட்டுள்ளது. டிசம்பர் 2-ந் தேதியில் இருந்து செய்முறை தேர்வுகள் நடைபெற வேண்டிய காலம். மழை யால் பாதிக்கப்பட்டுள்ள பள்ளிகளின் மாவட்டங்களில் அரையாண்டு செய்முறை தேர்வு நடத்த முடியாத சூழல் இருந்தால் ஜனவரி வாரத்தில் மாதம் முதல் வாரத் செய்முறை தேர்வு நடத்தி முடிக்க கூறியுள்ளோம்.



டிசம்பர் 9-ந்தேதிக்குள் பள்ளிகள் இயல்பு நிலைக்கு திரும்பி விட்டால் அரையாண்டு தேர்வுகள் ஜனவரி மாதம் நடத்தப்படும். மாணவர்களின் பாதுகாப்புக்கு தான் முன்னுரிமை வழங்க வேண்டும். எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த பள்ளிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது என்பது குறித்து மாவட்ட கல்வி அலுவலர்களிடம் பட்டியலை கேட்டுள்ளோம். வேறு பிரச்சினைகள் பள்ளிகளில் இருக்கிறதா உள்ளே நுழைவதற்கு ஏதாவது பிரச்சி னைகள் இருக்கிறதா என்பது குறித் குறித்தும் கணக்கெடுத்து வருகிறோம்.

வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ள பள்ளிகளில் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலரின் அறிவுறையோடு தேர்வுகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். மழையால் பாதிக்கப்பட்ட பள்ளிகளை தவிர மீதி உள்ள பள்ளிகளில் வரும் டிசம்பர் 9ந் தேதியிலிருந்து அரையாண்டு தேர்வு மாற்றம் இன்றி நடைபெறும்.

தலைமை ஆசிரியர் பணி இடங்கள் காலியாக இருப்பதற்கான வழக்குகள் நீதி மன்ற த்தில் நடைபெற்று வருகிறது. நீதிமன்ற வழக்கு முடிந்து விட்டால் உடனடியாக 2500 பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியரை வழங்க தயாராக இருக்கிறோம். 234 தொகுதிகளிலும் அரசின் திட்டங்கள் பள்ளிகளுக்கு எவ்வாறு சென்று உள்ளது என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டோம்.

எந்தெந்த பள்ளிகளில் புத்தகங்களோடு மாணவர்களின் சான்றிதழ்கள் நனைந்துள்ளதோ அந்த பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ் களும் புத்தகங்க ளும் உடனடியாக வழங்கப்படும். சான்றிதழ் வைக்கும் அறை, தலைமை ஆசிரியர் அறை தரைதளத்தில் முதல் தளத்திற்கு மாற்றவும் கூறியுள்ளோம். மழையால் பாதிக்கப் பட்ட அனைத்துப் பள்ளி களையும் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். இது குறித்த அறிக்கையை 2 நாளில் இணை இயக்குனர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெஞ்ஜல் புயலால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தரும புரி, திருப்பத்தூர், செங்கல்பட்டு ராணிப பேட்டை, வேலூர் மற்றும் நீலகிரி உள்ளிட்ட 15 மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக பள்ளிகளின் தற்போதைய நிலை மற்றும் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.